# அண்ணா கேட்டதை அவரது தமிழ்நாடு கேட்கிறது!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... 2 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் முன்னோடியாக போர் நிதி திரட்டித்தந்த தி.மு.க.வையும் அதன் அரசையும் பார்த்து தேசவிரோதிகள் என்கிறார்கள், தேசத்தந்தையைப் படுகொலை செய்த கோட்சேவின் கொள்கையை ஆதரிப்பவர்கள். நாம் தாய்நாட்டை மதிக்கிறோம். தாய்மொழியை உயிரெனக் காக்கின்றோம். வங்கதேசத்தில் தாய்மொழியையும் அதன் பண்பாட்டுக் கூறுகளையும் காத்திடுவதற்காகப் போராடி உயிரிழந்த மாணவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், பிப்ரவரி 21ஆம் நாளை தாய்மொழி நாளாக அறிவிக்கவேண்டும் என வங்கதேசத்தின் பிரதிநிதிகள் ஐ.நா.மன்றத்தில் முன்மொழிந்தனர். அதற்கான ஆதரவையும் பெற்றனர்.

ஐ.நா.அவையின் யுனெஸ்கோ அமைப்பின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி 1999ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21ஆம் நாள் உலகத் தாய்மொழி நாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒரு மொழி அழிந்தால், அந்த இனம் அழிக்கப்படும். அதன் மரபு வழி அறிவுச் செல்வம் மொத்தமாக அழிந்துபோகும். அதற்கு மாறாக, அவரவர் தாய்மொழிகளின் மீதான பிற மொழி ஆதிக்கத்தைத் தடுக்கும்போது, மொழி-பண்பாட்டு மரபுகளுக்கான விழிப்புணர்வை வென்றெடுத்து, உலக மக்களிடையே ஒற்றுமையை வளர்த்தெடுக்க முடியும் என்பதுதான் தாய்மொழி நாளின் நோக்கம்.

**வங்காள மொழி மாணவர்கள் தங்கள் தாய்மொழியைக் காத்திட 1952ல் உயிர் கொடுத்தார்கள். அவர்களின் போற்றுதலுக்குரிய தியாக வரலாற்றுக்கு முன்பே, இந்தியா-பாகிஸ்தான் - பங்களாதேஷ் அனைத்தும் ஒரே நாடாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த 1938ஆம் ஆண்டிலேயே, சென்னை மாகாணத்தில் மூதறிஞர் ராஜாஜியின்**

> நம் தாய்மொழி போலவே மற்றவர்களின் தாய்மொழியையும் மதிக்கிறோம். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் நம் சகோதர – சகோதரிகள் தான். இந்தித் திணிப்பால் தமது தாய்மொழிகளை இழந்த வடமாநிலங்களின் சகோதர-சகோதரிகளின் நிலை தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே நம் மொழிக் கொள்கை.

**அரசு திணிக்க முயன்ற இந்தியை எதிர்த்து, தாய்மொழியாம் தமிழைக் காக்கும் போராட்டத்தில் நடராசன்தாளமுத்து என இருவர் தங்கள் உயிரைக் கொடுத்த தியாக வரலாறு திராவிட இயக்கத்திற்கு உண்டு.**

மொழி உணர்வுமிக்க வங்காள தேச மாணவர்கள் பாகிஸ்தான் போலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். தமிழ்நாட்டில் 1965ஆம் ஆண்டு மொழிப் போர்க்களத்தில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த மாணவர்களும் இளைஞர்களும் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தாய்மொழியைக் காப்பதற்கு தங்கள் உடலுக்குத் தாங்களே தீவைத்துக்கொண்டு, 'தமிழ் வாழ்க -இந்தி ஒழிக' என்று முழங்கியபடியே உயிரைத் தியாகம் செய்தனர். காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டுக்கு மட்டுமின்றி, துணை ராணுவத்தின் வேட்டைக்கும் பலியான தீரர்களின் வரலாற்றுப் பக்கங்களைக் கொண்டவர்கள் நாம். உலகத் தாய்மொழி நாள் என்பது பிப்ரவரி 21ஆம் தேதி கடைப்பிடிக்கப்பட்டாலும் ஒவ்வொரு நாளுமே நமக்குத் தாய்மொழி நாள்தான். ஆதிக்க மொழிகளிடமிருந்து அன்னைத் தமிழைக் காப்பதற்கு எல்லா நாளிலும் விழிப்புடன் இருப்போம்.

நம் தாய்மொழி போலவே மற்றவர்களின் தாய்மொழியையும் மதிக்கிறோம். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் நம் சகோதர – சகோதரிகள் தான். இந்தித் திணிப்பால் தமது தாய்மொழிகளை இழந்த வடமாநிலங்களின் சகோதர – சகோதரிகளின் நிலை தமிழ்நாட்டுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே நம் மொழிக் கொள்கை. இந்த கொள்கைப் பார்வை தற்போது கர்நாடகம், கேரளம், மேற்கு வங்காளம், மராட்டியம் உள்ளிட்ட பல மாநிலங்களிலும் வெளிப்படுகிறது. "கன்னடத்தைப் புறக்கணித்து,இந்தியைத்திணிப்பவர்களை ஏற்க மாட்டோம்" என்று கூறி கர்நாடகாவில் இந்தி எழுத்துகளை அழிப்பது பற்றிய காணொலி சமூக வலைதளங்களில் பரவிக் கொண்டிருக்கிறது.

> இந்தி திவாஸ்' என்று கொண்டாடப்படுவது போல, எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளுக்கான நாட்கள் உண்டா? இந்தியைத் தவிர மற்ற இந்திய மொழிகளை பாரபட்சமாக அணுகுவது ஏன்?

இயற்கைத்தன்மையும் இயல்பான விருப்பமும் கொண்டவற்றைத்தான் உடலும் உள்ளமும் ஏற்றுக்கொள்ளும். திணிக்கப்படுவது எதுவாக இருந்தாலும் உடனடியாக அது வெளியேற்றப்படுவதுடன், மனிதர்களின் திறனையும் கெடுத்துவிடும். மொழித்திணிப்பு என்பதும் அப்படித்தான். தமிழ்நாடு முன்னெடுத்த மொழிக்கொள்கை அறிவியல்பூர்வமானதும் ஆக்கப்பூர்வமானதுமாகும். சமத்துவம் என்பது மொழிகளுக்கிடையிலும் இருக்க வேண்டும்.

> ரூபாய் நோட்டில் உள்ள இந்தியை அழிப்பீர்களா என்று எங்களைப் பார்த்து கேட்கும் அதிமேதாவிகளான உங்களைப் பார்த்து நாங்கள் கேட்கிறோம். ரூபாய் நோட்டில் அச்சிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தையும் இந்தியாவின் ஆட்சிமொழியாக அறிவிக்கத் தயக்கம் ஏன்? தமிழ் மீது பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் உயர்தனிச் செம்மொழி என்ற தகுதியுடைய எங்கள் தாய்மொழியை ஆட்சிமொழியாக்கிட எது தடுக்கிறது?

இந்திய அரசியல் சட்டம் 351வது பிரிவை சுட்டிக்காட்டி, இந்தி மொழியை வளர்க்கும் பொறுப்பை ஒன்றிய அரசு தீவிரமாக மேற்கொள்கிறது. ஆண்டுதோறும் செப்டம்பர் 14ஆம் நாளை 'இந்தி திவாஸ்' என்ற பெயரில் கொண்டாடுகிறது. இந்தியைக் கொண்டாடும் அந்த நாளில், இந்தித் திணிப்பு முழக்கங்களை ஒன்றிய ஆட்சியாளர்கள் முன்வைக்கிறார்கள். இந்திய மொழிகளை அச்சுறுத்தும் திட்டங்களை வெளிப்படுத்துகிறார்கள்.

'இந்தி திவாஸ்' என்று கொண்டாடப்படுவது போல, எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளுக்கான நாட்கள் உண்டா? இந்தியைத் தவிர மற்ற இந்திய மொழிகளை பாரபட்சமாக அணுகுவது ஏன்? ரூபாய் நோட்டில் உள்ள இந்தியை அழிப்பீர்களா என்று எங்களைப் பார்த்து கேட்கும் அதிமேதாவிகளான உங்களைப் பார்த்து நாங்கள் கேட்கிறோம். ரூபாய் நோட்டில் அச்சிடப்பட்டுள்ள மொழிகள் அனைத்தையும் இந்தியாவின் ஆட்சிமொழியாக அறிவிக்கத் தயக்கம் ஏன்? தமிழ் மீது பிரதமர் உள்ளிட்ட ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால் உயர்தனிச் செம்மொழி என்ற தகுதியுடைய எங்கள் தாய்மொழியை ஆட்சிமொழியாக்கிட எது தடுக்கிறது?

எங்கள் அண்ணா அன்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கேட்டதைத்தான் அவரது தம்பிகளான நாங்களும் கேட்கிறோம். அவரால் பெயர் சூட்டப்பட்ட எங்கள் தமிழ்நாடு கேட்கிறது. இலட்சியம் நிறைவேறும்வரை கேட்டுக்கொண்டே இருப்போம்.

(தொடரும்)

அன்புடன்
**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 21
05.03.2025

---

### கவிஞர் நந்தலாலா மறைவு

# இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை,மார்ச்.6-

" கவிஞர் நந்தலாலா மறைவு இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்" என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உடல்நலக்குறைவால் மறைந்த கவிஞர் - பட்டிமன்ற பேச்சாளர் நந்தலாலா அவர்களின் இல்லத்துக்கு நேரில் சென்று, அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

தலைசிறந்த கவிஞர் - பட்டிமன்ற பேச்சாளர் நந்தலாலா அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவுற்ற நிலையில், திருச்சி கருமண்டபத்தில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்று நந்தலாலாவின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.



தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர் சங்கத்தின் துணைத் தலைவராகவும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி, உடல்நலக்குறைவால் மறைந்த கவிஞர் – பட்டிமன்ற பேச்சாளர் நந்தலாலா அவர்களின் திருச்சி கருமண்டபத்தில் உள்ள இல்லத்துக்கு நேற்று (5.3.2025) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று, அவரது திருவுடலுக்கு மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தி, அவரை இழந்து வாடும் குடும்பத்தார் மற்றும் நண்பர்களுக்கு ஆறுதலையும். இரங்கலையும் தெரிவித்தார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் உடன் உள்ளனர்.

நந்தலாலா அவர்கள் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் துணைத்தலைவராகவும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மீது பெரும் பற்று கொண்டவர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீது மதிப்பும் - மரியாதையும் கொண்ட பண்பாளர். நந்தலாலா அவர்களின் மறைவு தமிழ் இலக்கிய உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தார், நண்பர்கள், த.மு.எ.க.ச தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கவிஞர் நந்தலாலா அவர்கள் மறைந்தாலும், அவரது பணிகள் என்றும் நிலைத்திருக்கும்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில்

# சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ச. அசோக்குமார் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 6 -

சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி ஆலோசனை கூட்டம் இன்று (06.03.2025) மாலை 7.00 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம், காம்தார் நகர் முதல் தெருவில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமை வகிக்கிறார். பொறியாளர் அணி மாநில துணை செயலாளர் இரா. நரேந்திரன் முன்னிலை வகிக்கிறார். சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ச.அசோக்குமார் அனைவரையும் வரவேற்று பேசுகிறேன்.

எனவே இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகிய அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:- கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 72வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட வழங்குதல் குறித்து ஆலோசனை கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் ச.அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

---

### இன்று நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், மார்ச் 6 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக ஆலேசானைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார். அது வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (6.3.2025) வியாழன் பிற்பகல் 3.00 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் - கண்டோன்மெண்ட் ஜோதி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில்



கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி,எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்டக் மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மாபெரும் மக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கிட கழகத் தலைவர் - மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகிற 10.3.2025 மற்றும் 11.3.2025 ஆகிய தேதிகளில் நம்முடைய மாவட்டத்திற்கு வருகை. மற்றும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

இவ்வாறு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான தா.மோ.அன்பரசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !

